நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.

<u>மன்ற கூட்ட அறிவிப்பு</u>

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் 29.05.2020 ஆம் நாள் வெள்ளி கிழமை காலை 12.00 மணிக்கு நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது.மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்
திருவத்திபுரம் நகராட்சி.

**<u>பொருள் எண்:1</u>**

இந்நகரின் எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்றி தினக்கூலி அடிப்படையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்கள் சுமார் தினந்தோறும் 85 நபர்களை பணிக்கு சப்ளை செய்திட ஒப்பந்த அடிப்படையிலான இந்நகர மன்ற தீர்மான அனுமதி எண்.41 நாள்: 27.05.2019ன்படி 29.05.2019ஆம் தேதியில் மூன்று ஆண்டுகளுக்கு வேலை உத்திரவு பெற்று 01.06.2019ஆம் தேதி முதல் பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரான SB & Co - சென்னை என்ற நிறுவனத்தார் பணிக்கான மூன்று ஆண்டு வேலை உத்திரவு பெற்றாலும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கண்ட நிறுவனத்தாரின் ஆண்டு முடிவில் உத்திரவின்படி இவ்வலுவலக துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் பணி குறித்த பணி திறன் அறிக்கையின்படி மேலும் நீட்டிப்பு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதால் இதன் அடிப்படையில் துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களின் குறிப்புரை பெறப்பட்டதில் மேற்கண்ட நிறுவனத்தாரே பணியினை தொடர்ந்து 01.06.2020 முதல் மேற்கொள்ளவும் இதனை நீட்டிப்பு செய்திட தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒப்பந்த நிபந்தனைகளின்படி ஓர் ஆண்டு முடிவில் உரிய நிர்வாகத்தாருக்கு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டால் நிர்வாக ஊதிய செலவினத் தொகையாக 10% உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

இதன்படி தற்போது ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.421– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. உயர்வு 10%ஆக ரூ.42–ம் சேர்த்தால் மொத்த ரூ.463– எனவும் இதன்படியாக 85 நபர்களுக்கு ஆகும் ஓர் ஆண்டு கூடுதல் செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>ப.அ.</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளவும் இவைக்கான கூடுதல் செலவினத் தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2551–2018–எச்1

<u>பொருள் எண்:2</u>

திருவத்திபுரம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்:TN 25 R 8367 வாகனத்தில் பேட்டரி பழுதடைந்துள்ளதால் வாகனம் இயக்க முடியாத நிலை உள்ளது. மேற்படி வாகன தேவையை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி

திரு.ஆர்.இளஞ்செழியன் ஈப்பு ஓட்டுநர் அவர்களின் சொந்த செலவில் புதியதாக பேட்டரி கொள்முதல் செய்து ஈப்பு வாகனத்தில் பொருத்தப்பட்டது. மேற்படி புதியதாக கொள்முதல் செய்து பொருத்தப்பட்ட பேட்டரி ஸ்ரீ ஜோதி ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், ஒர்க்ஸ், செய்யாறு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு செலவினம் ரூ.7700– வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.7700–யை செலவினம் மேற்கொண்ட திரு.ஆர்.இளஞ்செழியன் ஈப்பு ஓட்டுநருக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:786/2020/இ1

**பொருள் எண்:3**

திருவத்திபுரம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்:TN 25 AV 0245 வாகனத்தில் பழுதடைந்துள்ளதால் வாகனம் இயக்க முடியாத நிலை உள்ளது. மேற்படி வாகன தேவையை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி திரு.ச.இளம்வழுதி ஈப்பு ஓட்டுநர் அவர்களின் சொந்த செலவில் பழுதடைந்த பாகங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டு சரஸ்வதி ஆட்டோமொபைல்ஸ், செய்யாறு நிறுவனத்திடமிருந்து கேட்புப் பட்டியல் பெறப்பட்டு செலவினம் ரூ.4500– வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.4500–யை செலவினம் மேற்கொண்ட திரு.ச.இளம்வழுதி ஈப்பு ஓட்டுநருக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:1045/2020/இ1

**பொருள் எண்:4**

திருவத்திபுரம் நகராட்சி பொது நிதி 2019–2020ன் கீழ் கீழ்காணும் பணிகளுக்கு 20.05.2020 தேதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் .

| வ எ ண. | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் | சதவிகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டிற்கு கூடுதல் | மதிப்பீட்டிற்கு குறைவு |
| 1 | திருவத்திபுரம் நகராட்சி அலுவலகம் மற்றும் அம்மா உணவகத்தில் மறைக்காணி (CCTV) பொருத்துதல் பணி | ரூ.4.00 இலட்சம் | Sri Ram System, Cheyyar | - | 0.01% |
| | | | Subash Security System ,Cheyyar | 2.49% | – |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைவிகித்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sri Ram System, Cheyyar அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 652/2020/இ1

**பொருள் எண்:5**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள 11 BOV வாகனங்களில் சுமார் 10 எண்ணிக்கையில் சிறு பழுது முதல் பெரும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், இவ்வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்திடவும், இதன்படியான பழுது நீக்க செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணி மேற்கொள்ளவும் இவைக்கான செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.255–2019–எச்1

**பொருள் எண்:6**

பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள BOV வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து வழங்கிட 14.05.2020ஆம் தேதியில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | வாகன் எண். | மொத்த செலவு தொகை ரூ.GST உட்பட |
|---|---|---|---|
| 1 | SHREE BHAIRAVA GREEN LINES 116/90, காமராஜர் தெரு, ஜோலார்பேட்டை. | 8/12,5/12,1/12,3/12,7/8, 4/8,8/12,9/12,5/8,4/12 10 வாகனங்களுக்கு ஆன மொத்த செலவு தொகை | ரூ.69350– |
| 2 | ALKON POWER TECHNOLOGY No.27/12 பாண்டியன் தெரு, முகப்பேர் – EAST சென்னை – 600 107. | 8/12,5/12,1/12,3/12,7/8, 4/8,8/12,9/12,5/8,4/12 10 வாகனங்களுக்கு ஆன மொத்த செலவு தொகை | ரூ.84709– |
| 3 | JSS என்டர்பிரைசஸ், நெ.42, முனுசாமி நாயுடு தெரு, வாணியம்பாடி. | 8/12,5/12,1/12,3/12,7/8, 4/8,8/12,9/12,5/8,4/12 10 வாகனங்களுக்கு ஆன மொத்த செலவு தொகை | ரூ.104473– |

மேற்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் வ.எண்.1ல் உள்ள SHREE BHAIRAVA GREEN LINES - ஜோலார்பேட்டை அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், தற்போதைய கொரோனா வைரஸ் தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணி

மேற்கொண்டதையும் இவைக்கான செலவினத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.255–2019–எச்1

**பொருள் எண்:7**

இந்நகராட்சியின் 2020–2021ஆம் ஆண்டிற்கு எழுதுபொருட்களான A4 ரிம் பேப்பர்கள் இருப்பில் இல்லாத காரணத்தால் 100 எண்ணிக்கை கொண்ட பேப்பர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான ஸ்ரீ திருமகள் அச்சகம் அவர்களிடம் பொருட்கள் வாங்க தோராய செலவினத் தொகை ரூ.200000–க்கும் தனி அலுவலர் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2837/2019/B2

**பொருள் எண்:8**

இந்நகராட்சியில் அனைத்து பிரிவிற்கும் 2020–2021ம் ஆண்டிற்கு டோனர்கள் இருப்பில் இல்லாத காரணத்தால் Refill & Drums புதியதாக மாற்றம் செய்ய குறைந்த விலைப்புள்ளியில் K.பாபு, செய்யார் Computer Sales & Service என்ற உள்ளூர் நிறுவனத்திடம் 328 Toner & 12A Toner Refill செய்ய அதற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.20,000–த்திற்கு மன்றம் அனுமதி வழங்க தனி அலுவலரின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2837/2019/B2

**பொருள் எண்:9**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட கொடநகர் தலைமை நீரேற்று நிலையத்தில் 6 கிணறுகளுக்கு 25HP மோட்டர் பொருத்துதல் பணி செய்ய விலைப்புள்ளிகள் 20.04.2020 ஆம் தேதி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் .

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | திரு.அ.தனசேகரன் | ரூ.199410/- |
| 2. | திரு.பி.ரவி | ரூ.199620/- |
| 3. | திரு.டி.ராஜேந்திரன் | ரூ.199860/- |

மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அ.தனசேகரன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொண்டமைக்கு தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 807/2020/இ1

**பொருள் எண்:10**

2020 –2021ம் ஆண்டுக்கு திருவத்தியுரம் நகராட்சியின் மூலம் நகராட்சி ஆணையாளர், பள்ளி சத்துணவு திட்டப் பணியாளர்கள், பள்ளி சத்துணவு திட்டத்திற்கு வரும் மாண்யத் தொகைகள் மற்றும் ஓய்வு பெற்ற பள்ளி சத்துணவு திட்டப் பணியாளர்கள் மாதாந்திர ஓய்வூதியம் ஆகியவற்றை கருவூலகத்திற்கு மாதா மாதம் தயார் செய்து வழங்க

நகராட்சியில் தகுதியான பணியாளர்கள் இல்லாத நிலையில் வெளிப்புற கணிணி நிறுவணங்கள்மூலம் ஆன்லைனில் கருவூலக பட்டியல் தயார் செய்து அனுப்பவும் அதற்காகும் தோராய செலவுத்தொகை ரூபாய்.1.00 இலட்சத்தினை நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்.974/2016/சி1.**

**பொருள் எண்:11**

திருவத்திபுரம் நகராட்சி தொடர்பாக செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக ஜெயலட்சுமி என்பவர் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு A.S.No.63/17 and A.S.No.9/2018, பன்னீர் செலவம் என்பவர் தொடர்ந்த் வழக்கு எண்:A.S.No.31/2018 மற்றும் விஜயலட்சுமி மற்றும் இருவர் தொடர்ந்த வழக்கு எண் O.S.433/2019 வழக்கினை நடத்தியமைக்கு தொகை ரூ.35000.00யை வழங்கக் கோரியுள்ளார். மேற்படி நகராட்சி தொடர்பான வழக்குகளை நகராட்சியின் சார்பில் ஆஜராகி நடத்தியமைக்கு அரசு வழக்கறிஞருக்கு திரு.ஆர்.மணிவண்ணன் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.35000–யை வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:778–2020–இ1

**பொருள் எண்:12**

திருவத்திபுரம் நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்காணும் விவரப்படி விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான பட்டியல் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விளம்பரம் நாள் | தொகை .ரூ |
|---|---|---|
| 1. | KAL Publications(P) Ltd(தினகரன் நாளிதழ்)<br>விளம்பரம் நாள்:04.04.2020 | ரூ.23940– |
| 2. | தினமலர் நாளிதழ், வேலூர்<br>விளம்பரம் நாள்:04.04.2020 | ரூ.21000– |
| 3. | தினத்தந்தி நாளிதழ், வேலூர்<br>விளம்பரம் நாள்:04.04.2020 | ரூ.21840– |
| 4. | Express Publications(Madurai) pvt Ltd.,<br>தினமணி நாளிதழ், வேலூர்<br>விளம்பரம் நாள்:04.04.2020 | ரூ.20000– |
| 5. | மாலை மலர் நாளிதழ், வேலூர்<br>விளம்பரம் நாள்:05.04.2020 | ரூ.18144– |

மேற்படி கேட்புப் பட்டியல் தொகைகளை உரிய நிறுவனங்களுக்கு வழங்க ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:779–2020–இ1

29/5/2020

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி.